PROCEEDINGS OF THE 10th

# ANNUAL RESEARCH SESSION

## "RESEARCH REDEEMS REALISM"

EASTERN UNIVERSITY SRI LANKA

PER ARDUA AD SCIENTIAM

*Eastern University, Sri Lanka*
*Vantharumoolai*
*Chenkalady*
*Sri Lanka*

ARS - 2011

Scanned with CamScanner

# அம்பாறை மாவட்டத்தில் சமூகங்களுக்கிடையே சமூக நல்லுறவை ஏற்படுத்துவதில் சமய நிறுவனங்களின் பங்கும், அவை எதிர்நோக்கும் சவால்களும்

P.Sachithananatham[1]

## ஆய்வுச் சுருக்கம்

அம்பாறை மாவட்டம் பல்லின, பல்சமய, சமூகம் வாழ்கின்ற ஒரு மாவட்டமாகும். இச் சமூகங்களுக்கிடையே அடிப்படையில் பல்வேறுபட்ட வேறுபாடுகள் காணப்படுகின்றன. மதத்தால், இனத்தால், வேறுபட்ட மக்களுக்குள் வேறுபாடுகள் காணப்படுவது இயல்பானது. காலத்திற்கு காலம் குறிப்பாக 1980களுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் இச் சமூகங்களுக்கிடையே குரோத மனப்பாங்குகள் வளர்ச்சியடைந்து பிணக்குகள் ஏற்பட்டும் வந்திருக்கின்றன. இந் நிலைப்பாடு குறிப்பாக 1990 களில் உச்ச நிலையை அடைந்து வளர்ந்து வரலாயிற்று. அதன் பின்னர் தீவிரமடைந்த இன முறுகல்கள் அச் சமூகங்களுக்கிடையே மென்மேலும் பிணக்குகளை வளர்ச்சியடையச் செய்திருந்தன. இவற்றினைத் தடுப்பதற்கு அரச, அரசசார்பற்ற சமய, சமூக நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அத்தோடு 2000 ம் ஆண்டு காலப்பகுதியிலும் அதனைத் தொடர்ந்தும் அப்பிரதேசத்தில் இயங்கிவந்த சமய சமூக நிறுவனங்கள் மேற்கொண்ட இன நல்லிணக்க முயற்சிகள் இப் பிரதேசத்தில் வாழும் மக்களிடையே ஓரளவு சமூக நல்லுறவை மீளவும் கட்டியெழுப்ப உதவியது. இதற்கு கல்முனை, சம்மாந்துறை, அக்கரைபற்று பகுதிகளில் இயங்கி வரும் சமய நிறுவனங்கள் எத்தகைய பங்கினை வகித்துள்ளன அவை எவ்வாறான சவால்களை எதிர்நோக்கின என்பதனை ஆராய்வதாக இவ் ஆய்வு அமையும். ஒவ்வொரு சமூகத்தினரும் எதிர் கொள்ளும் பிரச்சினைகளின் கனதி அல்லது பெறுமானம் வேறுபட்டதாக காணப்படுதலும் அவ்வாறு வேறுபட்ட பிரச்சினைகளையுடைய சமூகங்களுக்கிடையே சுமூகமான நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதென்பதும் மேலும் சவாலான விடயமாக அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் வாழும் பல்லின சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம் காணப்பட வேண்டியது இன்றியமையாதது. அதனை கட்டியெழுப்பாத பட்சத்தில் இனங்களுக்கிடையே பிணக்குகள் ஏற்பட்டு அம்மாவட்டத்தின் இயல்பு நிலை பாதிக்கப்படும். ஆகவே இன நல்லிணக்கம் ஒவ்வொரு சமூகத்தினதும் நிலை வாழ்வுக்கு இன்றியமையாததொன்றானதாகும். ஒரு மாவட்டத்தில் ஒரு "சமூகம்" தனித்து வாழுமாக இருந்தால் அச் சமூகத்தில் இன நல்லிணக்கத்தின் தேவைப்பாடு முக்கியம் பெறுவதை விட பல்லின சமூகத்திற்கிடையே அதனுடைய தேவை இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. சமூக நல்லுறவு (Social Harmony) என்பதன் அர்த்தம் பல்லின சமூகங்கள் ஒன்றாக வாழுதலையே சுட்டி நிற்கின்றது. சமூக நல்லுறவை கட்டியெழுப்புகின்ற நிறுவனங்களிலே சமய நிறுவனங்களுக்கு தனியான இடமுண்டு. பாடசாலை, குடும்பம், அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் என்பவற்றை விட சமூகத்தில் சமய நிறுவனங்களான ஆலயம், உலமா சபை, இராமகிருஸ்ண மிஷன், பௌத்த விகாரைகள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் என்பன மக்களோடு மக்களாக மிக உணர்வு பூர்வமாக செயற்படுகின்ற நிறுவனங்களாக உள்ளன. அந் நிறுவனங்கள் குறுகிய இனவாத, அரசியல், பொருளாதார நோக்கங்களைத் தாண்டி செயற்படுமாயின் அவ்வச் சமயங்கள் போதிக்கின்ற உண்மையான சமூக நல்லுறவை கட்டியெழுப்பும் பணியை அவை நிறைவேற்ற முடியும்.

**திறவுச் சொற்கள்:** பல்லின சமூகம், சமூக நல்லுறவு, சிவில் சமூகம், சமய நிறுவனங்கள்

[1]Department of Comparative Religion, Eastern University, Sri Lanka. Sachith6@yahoo.com



Scanned with CamScanner

அறிமுகம்:

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய பல்லினசமூகத்தவர் வாழ்ந்து வருகின்றனர். அம்பாறை மாவட்டத்தின் நில அமைப்பு அச் சமூகங்களை அருகருகே (பிட்டும் தேங்காய்ப் பூவும் போல) சமூக நல்லிணக் கத்தோடு வாழ வழிவிடலாயிற்று. ஒரு சமூகத்தினுடைய குடியிருப்புப் பகுதியைத் தாண்டி இன்னுமொரு சமூகத்தினுடைய பகுதிக்கு பயணிக்க வேண்டிய நிலைப்பாடும் ஒரு சமூகத்தில் மற்றுமொரு சமூகம் தங்கியிருக்கின்ற நிலைப்பாடும், இம்மாவட்டத்தில் காணப்படுவது இயல்பாகவே இம்மாவட்டத்தில் சமூக நல்லிணக்கத்தின் தேவையை வற்புறுத்துகின்றது. இவ்வாறாக இயல்பாகவே சமூகங்களுக்கிடையே ஒத்திசைவு காணப்படுகின்ற மாவட்டத்தில் கடந்த காலங்களில் குறிப்பாக 1980,1990 ஆண்டு காலப்பகுதிகளில் இச் சமூகங்களுக்கிடையே குரோத மனப்பாங்குகள் வளர்ச்சியடைந்து பிணக்குகள் ஏற்பட ஆரம்பித்தன. இந்நிலையில் இருந்து மீண்டும் மக்களை இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வருவதற்கான நல்லிணக்க முயற்சிகளை அம்மாவட்டத்தில் உள்ள அரச, அரசசார்பற்ற சமூக நிறுவனங்கள் மேற்கொண்டிருந்தன. அவ்வாறு சமூக நல்லிணக்கத்தை கட்டி எழுப்புதலும், அதன்பொழுது எதிர்கொள்ளும் சவால்களும் பற்றி இக்கட்டுரையில் கலந்துரையாட முனைகிறேன்.

தமிழில் இணக்கம், ஒத்திசைவு, ஒழுங்கு என்றபதங்கள் ஆங்கிலத்தில் "Harmony" என அழைக்கப்படுகின்றது. இதன் பொருள் "முரண்பாடும் பூசலும் அற்ற அமைதியான மற்றும் ஒத்திசைவுடைய நட்புடன் கூடிய நிலையாகும் எனப் பொருள் 'கொள்ளப்படுகின்றது".[1] அந்தவகையில் "Social Harmony" என்பது சமூகங்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்திசைவோடு கூடி வாழ்தலை சுட்டி நிற்கிறது.

மேலும் சமூக நல்லிணக்கம் என்பது மற்றவர்களை சகித்துக்கொள்ளுதல் என்பதை மையமாகக் கொண்டதாகும். சமூக நல்லிணக்கம், இன நல்லிணக்கம் (Racial Harmony) என்ற பதங்கள் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும் பல்லின சமூகம் வாழுகின்ற ஒருநாட்டில் இவ்விரண்டும் இன்றியமையாதன. அதனை "Racial Harmony is harmony between the races to maintain good relationship between racial groups. This is very important for a multi racial country".[2] என்பதனூடாக விளங்கிக் கொள்ளலாம். இதன் பிரகாரம் சமூக நல்லிணக்கம் என்பது முற்றுமுழுதாக இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையே சுட்டி நிற்கின்றது. சமூக வாழ்வியலினுடைய நோக்கமும் நல்லிணக்கத்துடன் கூடி அமைதியாக வாழ்தலாகும். இந்நோக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கப்படுகின்ற போது சமூக நல்லிணக்கம் சீர்குலைகின்றது.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் வாழும் பல்லின சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம் சீர் குலைக்கப்படாமல் கட்டியெழுப்பப்பட வேண் டியது இன்றியமையாதது. அதாவது இனங்களுக்கிடையே பிணக்குகள் ஏற்பட்டு அம் மாவட்டத்தின் இயல்பு நிலை பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த சமூக நல்லிணக்க முயற்சிகள் அவசியமானவை.

## ஆய்வின் நோக்கம்
## (Objective of the Research)

சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் அண்மைக் காலமாக முக்கியமான ஒரு விடயமாக இருப்பதனால் அதனை முன்னெடுப்பது. சமூக நல்லிணக்கத்தை பேணுவதற்கு சமூக, சமய நிறுவனங்களின் பங்கு இன்றியமையாதது என்பதனை வலியுறுத்துதல். இவற்றுள் சமய நிறுவனங்கள் நேரடியாக சமூகத்தில் செல்வாக்கு செலுத்துவதனால் அவற்றின் பங்களிப்பினை ஆராய்ந்து எவ்வாறு அவற்றை வினைத்திறன் மிக்க நிறுவனங்களாக மாற்றுதல் என ஆராய்



Scanned with CamScanner

தல். அம்பாறை மாவட்டத்தில் வாழும் பல்லின சமூகத்தவரிடையே சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதனையும் அவ்வாறு முயற்சிக்கும் போது அந்நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன என்பதனையும் ஆராய்வதாக அமையும். அம்பாறை மாவட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம், சமூகங்களுக்கிடையே நிலவும் பிரச்சினைகளுக்கான அடிப்படை காரணங்களைக் அடையாளம் கண்டு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க சமய நிறுவனங்கள் என்னவிதமான பங்களிப்பினை ஆற்றமுடியும் என ஆராய்தல்.

## ஆய்வு முறையியல் (Research Methodology)

நேரடியாக பங்குபற்றி அவதானித்தல், கள ஆய்வு, சமய நிறுவனங்களின் அறிக்கை களினூடாக தகவல்களை பகுப்பாய்வு செய்தல், நேர் காணல் என்பன இவ்வாய்வினை மேற் கொள்வதற்கான ஆய்வு முறையியலாக அமைந்துள்ளன.

## ஆய்வுப் பிரச்சினைகள் (Research Problems)

தமிழர்கள், சிங்களவர், முஸ்லிம்கள், மத்தியிலே மிக நீண்ட காலமாக நிலவி வந்த பொறாமை, நிலத்தை அபகரித்தல், தனிப்பட்ட குரோதங்கள், ஒருசமூகத்தை இன்னுமொருசமூகம் அடக்குதல், காட்டிக்கொடுத்தல் போன்ற பிரச்சினைகள் இவர்கள் மத்தியில் பிணக்குகளை ஏற்படுத்தின. அவற்றுள் குறிப்பிடத்தக்கது எல்லைப் புற கிராம வாழுனர்கள் மத்தியில் காணப்பட்ட நில எல்லை தொடர்பான பிரச்சினை இனங்களுக்கிடையே முரண்பாடுகள் உருவெடுக்க ஏதுவாக அமைந்தது. அத்தோடு சமமான அபிவிருத்திச் செயற்பாடுகள் அம்மாவட்டத்தில் வாழும் இனங்களுக்கிடையே முன்னெடுக்கப்படாமையும் அங்கு வாழ்பவர்களுக்கிடையே மனக்கசப் பையும், பிணக்குகளையும் ஏற்படுத்தியுள்ளன.

## ஆய்வுப்பிரதேசம் (Research Area)

பண்டைக்கால மட்டக்களப்பு வடக்கே வெருகல் ஆறு முதல் தெற்கே குமுக்கன் ஆறுவரை விரிந்திருந்த பெரு நிலப்பரப்பாகும். 1961இல் இப்பெரு நிலப்பரப்பில் ஒரு பகுதி அம்பாறை மாவட்டமாக உருவாக்கப்பட்டது. அம்பாறை மாவட்டம் இலங்கையின் மூன்றாவது பெரியமாவட்டமாகும். இம்மாவட்டம் வடக்கே மட்டக்களப்பு மாவட்டத்தையும் தெற்கே அம்பாந்தோட்டை மாவட்டத்தையும் கிழக்கே வங்கக் கடலையும் மேற்கே மொனராகலை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டு ள்ளது. இதனுடைய பரப்பு 4431.4 சதுர கிலோமீற்றர் ஆகும். இம்மாவட்டம் இலங்கை வளநாட்டின் நெற்களஞ்சியம் என்று வர்ணிக்கப்படும் வயலும் வயல்சார்ந்த பெரும் நிலப்பரப்புடைய மாவட்டமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் சனத்தொகை பற்றிய பார்வை அங்கு சமூகங்களுக்கடையே இனநல்லிணக்கம் கட்டாயமாக நிலவ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அதேவேளை இன விகிதாசார ரீதியாக அம் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் சடுதியான மாற்றங்கள் இனங்களுக்கிடையே மனக்கசப்பினை ஏற்படுத்தவும் ஏதுவாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக 2002ஆம் ஆண்டு 596000 பேராக காணப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 2009 இல் 634000 பேராக அதிகரித்துள்ளது. இது திட்டமிடப்பட்ட குடியேற்றங்களினால் ஏற்பட்ட அதிகரிப் பேயாகும். அத்தோடு பெரும் பான்மையாக வாழ்ந்த மக்கள் அப்பிரதேசங்களில் இருந்து வன்செயலினால் இடம்பெயர்ந்து வேறுமாவட்டங் களுக்கு சென்றதும் அங்குள்ள ஏனைய இனங்களின் விகிதாசாரம் அதிகரிக்க காரணமாயிற்று. அத்தோடு அப்பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதும் அவர்களி டையே மீண்டும் சமூக நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதும் சமய நிறுவனங்களுக்கு பெரும் சவாலாக உள்ளது. உதாரணமாக திராய்க்



Scanned with CamScanner

கேணி, கஞ்சிகுடிச்சாறு, போன்ற பகுதிகளில் இருந்து 1990களில் வெளியேற்றப்பட்ட மக்களை மீளக்குடியேற்ற இவ்வமைப்புக்களால் முடியாது இருப்பதனைக் குறிப்பிடலாம்.

**அம்பாறை மாவட்டத்தில் இன வீதாசாரம்**

| இனங்கள் | 1881 | 1971 | 1981 | 2001 | 2007 |
|---|---|---|---|---|---|
| சிங்களவர்கள் | 7.0 | 30.3 | 37.6 | 39.3 | 37.5 |
| தமிழர்கள் | 37.0 | 23.4 | 20.5 | 18.7 | 18.3 |
| முஸ்லிம்கள் | 55.0 | 45.8 | 41.5 | 41.5 | 44.0 |

*மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம், 2006*

அட்டவணைப்படி 1881ஆம் ஆண்டில் சிங்களவர்கள் 7% மாகவும் தமிழர்கள் 37% மாகவும் காணப்பட்டிருக்கிறார்கள். இதன்படி தமிழர்கள் சிங்களவர்களை விட அதிகமாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது. இந்நிலமை அடுத்து காட்டப்பட்டுள்ள ஆண்டுகளில் முற்றிலும் மாறுபட்டுள்ளது. தமிழர்களை விட சிங்களவர்களின் வீதாசாரம் அதிகரித்துள்ளது. அதாவது 2007 ஆம் ஆண்டினை பார்க்கையில் சிங்களவர்கள் 37.5% மாகக் காணப்பட தமிழர்கள் 18.3 % மாகவே காணப்படுகின்றனர். அதேவேளை முஸ்லிம் களின் வீதாசாரமும் 1881 இல் இருந்ததை விட அடுத்து வந்த காலப்பகுதிகளில் குறை வடைந்துள்ளது. இவற்றைக் கொண்டு தமிழ், முஸ்லிம்களின் வீதாசாரம் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்ல சிங்களவர்களின் வீதாசாரம் அதிகரித்து வந்துள்ளதை அறியமுடிகின்றது.[3] இது இம்மாவட்டத்திலுள்ள சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை வளர்த்தெடுப்பதற்கு தடையாக வுள்ளது.

### அம்பாறை மாவட்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்கள்

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட சமூக அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்கள் இயங்கிவருகின்றன. அவற்றுள் சமாதனத்திற்கான அமையம் (Peace Foundation), மக்கள் மன்றம் (People Forum), அம்பாறை மாவட்ட சர்வமத சமாதான ஒன்றியம் (Inter Religious federation for Ampara District), இனங்களுக்கிடையேயான நட்புறவு அமைப்பு (Friendship among the Ethnic), கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியம் (YMCA)[4] போன்ற அமைப்புக்கள் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு செயற்பட்டு வருகின்றன. இவைதவிர அங்குவாழ்கின்ற சமய சமூகங்களைப் பிரதிபலிக்கும் ஆலயங்கள், பௌத்த விகாரைகள், பள்ளிவாசல்கள் போன்றனவும் அவ்வச் சமூகங்களுக்கிடையே சமயவிழுமிய, சமூக நல்லிணக்கம் பற்றிய போதனைகளைச் செய்து வருகின்றன. அவற்றோடு அங்கு வாழ்கின்ற சமயங்களினுடைய நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்புக்களான பள்ளிவாசல் சம்மேளனம், இந்துசமயச் சம்மேளனம், இராமகிருஸ்ணமிசன், கிறிஸ்தவசமய சம்மேளனம் போன்றனவும் அவற்றின் தலைவர்களும் சமூகத் தலைவர்களிற்கிடை யேயான சமூக நல்லிணக்க முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றனர்.

### அம்பாறை மாவட்ட சர்வமத சம்மேளனம் (Inter Religious Federation for Ampara District)

இவ்வமைப்பானது 2007 ம் ஆண்டில் இருந்து ஒரு சம்மேளனமாக இயங்கி வருகின்றது. ஆரம்பத்தில் முஸ்லிம் பெண்களின் ஆய்வு மற்றும் நடவடிக்கைகளுக்கான சம்மேளனம், அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளி வாசல்களின் சம்மேளனம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்பட்டு வந்தது. பின்னர் அம்பாறை மாவட்ட இந்து, கிறிஸ்தவ சம்மேள



Scanned with CamScanner

னங்களை உள்வாங்கிக் கொண்டு அம்பாறை மாவட்டத்திற்கான சர்வமத சம்மேளனமாக இயங்கத் தொடங்கியது. இது ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமாக இயங்கும் உலக சமயங்களினதும் சமாதானத்திற்குமான சம்மேளனத்தின் (World Council for Religion and Peace கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.[5]

அம்பாறை மாவட்ட சர்வமத சம்மேளனம் அதிகமாக அம்மாவட்டத்தில் வாழும் மக்களிடையே சமூக நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவதற்கு பல்வேறு மட்டங்களில் செயற்பட்டு வருகின்றது. இவ்வமைப்பானது அம்பாறை மாவட்டத்தை நான்கு வலயங்களாகப் பிரித்து கல்முனை, அம்பாறை, பொத்துவில் அக்கரைப்பற்று, சம்மாந்துறை, ஆகிய பகுதிகளில் உள்ள சர்வமதத்தலைவர்களுடனும் இணைந்து தமது சமூக நல்லிணக்கப் பணியை ஆற்றிவருகின்றது.

இவ்வமைப்பானது மேர்சி கோப்ஸ் (Mercy Corps) நிறுவனத்துடன் இணைந்து பாடசாலை மட்டங்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான சகவாழ்வுக் கல்வி பயிற்சிகளை வழங்கி வருகிறது. அதாவது எப்படி ஏனைய சமூகத்தவர்களை மதித்து நடக்கப்பழகிக் கொள்ள வேண்டும் என்றும், ஏனைய சமயங்கள் கூறும் மனித விழுமியங்கள் அவற்றிற் கிடையேயான ஒருமைப்பாட்டு அம்சங்களை மாணவர்களுக்கு புகட்டுதல் போன்ற பயிற்சிகளை அளித்துவருகிறது.

மேலும் அவ்வமைப்பு உறவுகளை கட்டி யெழுப்புவதற்கான திறனைவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் (Enhanced Capacity for Relationship Building (ECRB) கீழ் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை செய்துவருகின்றது. அவற்றுள் ஒன்றாக ஒவ்வொரு சமூகத் தலை வர்களுடனும் தொடர்ச்சியாக இடை யூடா ட்டத்தில் ஈடுபடல் மூலமாக அம்மாவட்டத்தில் ஏற்படும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்தோடு கிராம மட்டத்தில்வாழும் சமூகத்தலைவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்குதல். தமிழ், சிங்கள, முஸ்லிம், இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து இளைஞர் முகாம் (Youth camp) நடாத்துதல் போன்ற திட்டங்களினூடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது. மேலும் 2010ம் ஆண்டில் சேவாலங்கா (Sewa Lanka) அமைப்பின் ஒத்துழைப்போடு அம்பாறை சிங்கள மக்களை அப்பிரதேச தமிழ் மக்களோடு இணைத்து நல்லிணக்க நிகழ்ச்சிகளை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் இலங்கையில் சமாதானத்தை விருத்திசெய்தல் (Development of Peace in Sri Lanka) எனும் திட்டத்தின் கீழ் மதகுருமார் கிராமத்தலைவர்கள், சமூக அமைப்புக்களின் தலைவர்களுக்கிடையே இனநல்லிணக்க பயிற்சிகளை நடாத்தியமை போன்றனவும் அப்பிரதேசத்தில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகும். அதேபோல சுவிஸ் கண்டக்ட் (Swiss Contact) நிறுவனத்தின் அனுசரணையோடு தமிழ், சிங்கள, முஸ்லிம், இளைஞர் யுவதிகளுக்கு தொழில் முயற்சியாண்மை விருத்தி, பிரச்சினைகளை அடையாளம் காணுதலும் தீர்த்தலும், தலைமைத்துவமும் ஒருங்கிணைப்பும் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டது. எதிர்காலச் சந்ததியினர் நல்லிணக்கத்தோடு வாழ வழி சமைக்கும் நடவடிக்கையாக இது கொள்ளப்பட முடியும். மேலும் மூன்று சமூகத்தவர்களும் ஒன்றாக இணைந்து தமதுபிரதேசங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளல், அனர்த்த பாதிப்புக்கள் இடம் பெறும் போது சமூகங்களுக்குச் சமூகம் உதவி புரிதல் போன்ற நிகழ்வுகளின் ஊடாக சமூக நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறாக எடுக்கப்படும் முயற்சிகள் யாவும் இம் மக்களது உள்ளத்தில் கடந்தகால வடுக்களைத் தாங்கிக் கொண்டு கைகோர்த்து விளையாடுவது போன்றதாக தென்படுகின்றது. ஆகவே இம்முயற்சிகள் எந்தளவிற்கு வெற்றிகரமானதாக அமையும் என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.



Scanned with CamScanner

## ஆய்வினால் கிடைக்கப் பெறும் பயன்பாடு (Research Outcomes)

இனங்களுக்கிடையே மனக்கசப்புகள் புரையோடிப் போயிருந்த காலங்களைக் கடந்து சுமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற தற்போதய சூழலில் மேலும் அச் சமூகங்களிடையே முரண்பாடுகள் ஏற்படாத விதமாக தடுத்து சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கும் தொடர்ச்சியாக அதனைப் பேணுவதற்கும் இவ் ஆய்வு உதவும்.

மக்கள் மத்தியில் நிலவிவந்த நிலஎல்லை, குடியேற்றங்கள், ஒடுக்குமுறைகள், அம் மாவட்டத்தில் பெரும்பான்மையானவர்கள் சிறுபான்மை மக்களை புறக்கணித்தல் போன்ற பிரச்சினைகளுக்கு மாற்று யோசனைகளை முன்வைத்தலும் அம்மக்களிடையே சமூக நல்லிணக்கத்தை கட்டி எழுப்புதலும். குரோத மனப்பான்மைகள், ஒரு சமூகத்தைக் கண்டு இன்னுமொரு சமூகம் பொறாமைப்படுதல் போன்ற மக்கள் மத்தியில் காணப்படும் மனோநிலை பிணக்குகளை இல்லாமல் செய்வதற்கு முயற்சித்தல்.

அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே காணப்படுகின்ற பிணக்குகளுக்கான மூல காரணங்களை கண்டறிதல். குறிப்பாக நிலஎல்லைப் பிரச்சினை, தமிழர்களின் நிலங்களில் முஸ்லிம்கள் குடியமர்த்தப் பட்டிருத்தல், முஸ்லிம்களின் பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படல் போன்றவற்றிற்கு அம்பாறை மாவட்டத்தில் இயங்கும் சர்வமத சம்மேளனத்தினூடாக தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சித்தல். அதற்கான உபாயங்களை எடுத்துக் காட்டல். அத்தோடு இடப்பிரச்சினைகளை இல்லாமல் செய்வதற்காக கலந்துரையாடல்கள், கலாசார நிகழ்வுகள், விழிப்பூட்டல் கருத்தரங்குகள் என்பவற்றை மேற்கொள்ளல்.

### சமய நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

ஒவ்வொரு சமய நிறுவனமும் அவ்வச் சமூகங்களுக்கு மாத்திரம் வழி காட்டுபவையாக உள்ள நிலையில் ஏனைய சமூகங்களையும் இணைத்துக் கொண்டு அவர்களுடன் நல்ல உறவைப் பேண வழி காட்டுபவையாக இருக்கும் நிலை ஏற்படாத வரை அது சவாலாக அமையும். மேலும் சமய நிறுவனங்கள் குறுகிய இனவாத, அரசியல், பொருளாதார நோக்கங்களைத் தாண்டி செயற்படாத வரை அவ்வச் சமயங்கள் போதிக்கின்ற உண்மையான சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் பணியை நிறைவேற்றுவது பெரும் சவாலாக அமையும்.

பல்லின சமூகங்களுக்கிடையே இன நல்லிணக்கத்தை குழப்புகின்ற சக்திகளின் கைப்பிடிக்குள் இருந்து விடுபட்டு சுயாதீனமாக அச்சமய நிறுவனங்கள் இயங்க முடியாமல் இருப்பது சமூக நல்லிக்கத்தினைக் கட்டியெழுப்புதலை அசாத்தியமாக்குகிறது. சமய நிறுவனங்களின் தலைவர்கள் சிவில் சமூகத்தவர்களாக (Civil Society) இருப்பதனால் சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது அவர்களுக்கு பெரும் சவாலாக அமைகிறது. அரசியல் வாதிகளினதும் அரச நிருவாகிகளினதும் இனவாத செயற்பாடுகள் குறிப்பாக சமூக நல்லிணக்கத்தைக் குழப்புகின்ற சக்திகளுக்கு துணையாக இருப்பது அவர்களுக்கு சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு சவாலாக உள்ளது. உதாரணம்: குடியேற்றத் திட்டங்கள் சிங்களவர்களை முஸ்லிம் பகுதிகளிலும், தமிழ் பகுதிகளிலும் குடியேற்றுவதும் அதற்கு அரச ஆதரவு இருப்பதும் அச்சமூகங்களுக்கு இடையே சமூக நல்லுறவை ஏற்படுத்துவதில் பெரும் தடையை ஏற்படுத்துகின்றது.

ஒவ்வொரு சமூகத்தினரும் கடந்த காலத்தில் எதிர் கொண்ட அல்லது தற்போது எதிர் கொள்ளுகின்ற பிரச்சினைகளின் கனதி (magnitude) அல்லது பெறுமானம் வேறுபட்டதாக காணப்படுதலும், அவ்வாறு வேறுபட்ட பிரச்சினைகளையுடைய சமூகங்களுக்கிடையே சுமூகமான நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் சமய நிறுவனங்களுக்கு பெரும் சவாலாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக அம்பாறை



Scanned with CamScanner

மாவட்டத்தில் 1990களில் தமிழர்கள் மத்தியிலே முஸ்லிம்கள் அரசபடைகளுடன் இணைந்து தமிழர்களைக் காட்டிக்கொடுத்தார்கள் என்ற மனநிலை வெகுவாக காணப்பட்டது. அதேபோல முஸ்லிம்களின் மத்தியில் தமிழர்களுக்கு சார்பான ஆயுதக்குழுக்கள் தங்களை தாக்கினார்கள் ஆகவே தமிழர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற மனோநிலையும் காணப்பட்டது. இந்த மனோநிலையில் இருந்து இரு சமூகங்களையும் விடுவித்து சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் ஒரு சவாலாக அமைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்கள் கல்வி, அரசியல், பொருளாதாரம், என்பவற்றில் துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதும் அவர்கள் அரசியலில் பங்குதாரர்களாக அரச நிருவாகிகளாக இருந்து கொண்டு சுகபோகங்களை அனுபவித்து துரித அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து தமக்கென ஒருதனியான அலகினைக் கோருவதும், அம்மாவட்டத்தில் வாழும் ஏனைய தமிழ் சிங்கள மக்கள் யுத்தம், சுனாமி என்பவற்றால் பாதிக்கப்பட்டும் அபிவிருத்தியில் பின்தங்கி இருப்பதும் அவர்களுள் குறிப்பாக தமிழர்கள் அரசியல் அநாதைகளாக வாழ்ந்துவருவதும், சமமான அபிவிருத்திப் போக்கு அம்மாவட்டத்தில் இடம்பெறவில்லை என்பதனை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறான நிலமைகள் இம்மாவட்டத்தில் வாழும் இனங்களுக்கிடையே சமூகநல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு பெரும் சவாலாக உள்ளது எனலாம்.

## ஆய்வின் பரிந்துரைகள் (Recommendations)

இனங்களுக்கிடையே சமமான அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினரின் இடங்களை ஏதோ ஒருவிதமாக அபகரிக்கின்ற நிலைப்பாடுகள் இல்லாமல் செய்யப்பட வேண்டும். ஓர் இனம் மற்றுமோர் இனத்தின் சமய, கலாசார, பண்பாட்டு அம்சங்களை மதிக்கப்பழக வேண்டும்.அப்பிரதேச மக்களிடையே "மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும்" எனும் மனோநிலை மாற்றம் (Attitude Change) ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

## ஆய்வின் முடிவு (Conclusion)

சமய நிறுவனங்கள் மேற்கொள்ளுகின்ற முயற்சிகளினால் அம்பாறை மாவட்டத்தில் வாழுகின்ற இனங்களுக்கிடையே மற்ற சமூகங்களையும் சகிப்புத்தன்மையோடு ஏற்றுக் கொண்டு வாழும் மனோநிலை மாற்றம் ஏற்படுத்தப்படலாம். அங்குவாழுகின்ற ஒவ்வொரு இனமும் கடந்த காலங்களில் எதிர் நோக்கிய பிரச்சினைகளும் அவற்றின் தாக்கமும் வெவ்வேறுபட்ட கனதியையுடையவை ஆகையினால் அவற்றிற்கான தீர்வுகள் குறித்த முயற்சிகள் ஓரளவு சுமூகமாக மேற் கொள்ளப்படலாம். அவ்வாறு இடம்பெறும் போது அம்மக்கள் திறந்த மனதோடு சமூக நல்லிணக்கம் பற்றிபேச முன்வரலாம். மேலும் அவ்வமைப்புக்கள் சமூக நல்லிணக்கம் குறித்து கரிசனையோடு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது. அத்தோடு பழையனவற்றை மறந்து ஒற்றுமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் எதிர்கால சந்ததியினருக்கு நல்லிணக்கத்துடன் கூடிவாழ்வதற்கான பயிற்சிகளை அந்நிறுவனங்கள் பலசவால்களுக்கு மத்தியில் மேற்கொள்வது சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான சிறந்த தந்திரோபாயமாகும்.

## உசாத்துணை நூல்கள்:

1. Cowie A. P. (1992), Oxford Advanced Learners Dictionary, Oxford University press, London.
2. Murugan. V. Dr, (edit) 2009, "Oxford English-English Tamil Dictionary", Oxford University press,India.
3. Inter Religious Federation of Ampara District -IRFAD(2009), Profile, Main Street,Sainthamaruthu, Sri Lanka.
4. National foundation for communal harmony, "Universal Education for Social Harmony", New Delhi, June 2011.
5. Willion Shanon,H.,( 1996) "Seeds of Peace Contemplation and Non Violence", Crossroad Publishing Company, New York.



Scanned with CamScanner